# ஜாமக்காரன்

# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 11**

**NOVEMBER 2020 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**


ஜாமக்காரன் JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பானவர்களே,

உங்கள் யாவருக்கும் எங்கள் புதுவருட வாழ்த்துக்கள். பத்திரிகை மிக தாமதமாக வெளியிடுவதால் அக்டோபர் – நவம்பர் ஜாமக்காரனை ஒரே கவரில் அனுப்புகிறேன். எப்படியும் இந்த இரண்டு பத்திரிகைகளும் 2021 ஜனவரி மாதம் முதல் வாரத்தில்தான் உங்கள் கைகளில் கிடைக்கும். அதனால்தான் புதுவருட வாழ்த்துதலை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

## புது வருட செய்தி

அன்பானவர்களே! கடந்த வருடம் 2020 பெப்ருவரி மாதம் நம் நாட்டில் பிரவேசித்த **கொரோனா கிருமி** கடந்த 11 மாதங்களாக நம்மில் பலருடைய வாழ்க்கையை சீரழித்தது. உலகம் முழுவதும் இந்த கிருமி மக்களை தாக்கி, கம்பெனிகள், தொழிற்சாலைகள், சாதாரண கடைகள் முதற்கொண்டு பெரிய பெரிய கடைகள், ஓட்டல்கள் யாவும் மூடப்பட்டு தொழிலாளிகள் வேலையிழந்து முழு குடும்பமும் பட்டினி கிடக்க வேண்டியதானது. பெரும் முதலாளிகள், சினிமா தியேட்டர், தொழிற்சாலை முதலாளிகள் வங்கியில் வாங்கிய பெரும் கடன்களை திரும்பி அடைக்க முடியாமல், வட்டி கட்ட முடியாமல் பலர் தற்கொலை செய்து கொண்டார்கள்.

பணத்துக்காக கொலைகள், கொள்ளைகள் நாடெங்கும் பெருக அரம்பித்தது. இப்போதும் அது தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

கிறிஸ்தவ சபைகளில் ஆராதனைக்கு இப்போதுதான் 50 நபர்கள கூடலாம் என்று சில கட்டுப்பாடுகளோடு அனுமதி கிடைத்துள்ளது. அதனால் வாராவாரம் வரும் ஆராதனை காணிக்கைகள் குறைந்தன. ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை. கன்வென்ஷன் நடக்காததால் கன்வென்ஷன் பிரசங்கம் மட்டுமே ஊழியமாய் செய்து வந்தவர்களும் சுவிசேஷகர்களுக்கும் வேறு வருமானம் இல்லாததால் மிகவும் கஷ்டப்பட்டதாக கேள்விப்பட்டேன்.

இப்படி பல விதங்களில் கடந்த 11 மாதங்கள் பலர் கஷ்டத்துக்குள்ளானார்கள். ஆனாலும் கர்த்தரின் வசனத்தின்படி **சாட்சியுடன் வாழ்ந்த குடும்பங்களை** கர்த்தர் கிருபையாக போஷித்த அற்புத சாட்சிகளை கேட்டு தேவனை துதித்தேன். கொரோனா வியாதியால் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் பட்ட பாடுகள் ஏராளம். **விசுவாசிகளும் – அவிசுவாசிகளும்** ஒன்றுபோல் பாதிக்கப்பட்டார்கள். அப்போது எழுந்த கேள்விகளுக்கு TVயிலும். கிறிஸ்தவ **பத்திரிகையிலும்** சபை online மூலம் ஊழியர்களால் சொல்லப்பட்ட செய்திகளிலும் விதவிதமான பதில்கள் உங்களுக்கு கிடைத்திருக்கும் என்பதை அறிவேன். **நம் எல்லாருடைய ஜீவியத்தையும்** ஆராய்ந்து பார்க்க **கொரோனா காலம்** நம்மில் பலருக்கு உதவின. பலர் **கர்த்தரை தேட ஆரம்பித்தார்கள்**, பலர் **ஒழுங்காக வேதம்** வாசிக்க ஆரம்பித்து வாழ்கையிலும், குடும்பத்திலும் நல்ல ஆவிக்குரிய மாற்றங்களையும், மன சமாதானத்தையும் அடைந்தார்கள்.

அதே சமயம் பல கஷ்டங்களை அனுபவித்த கிறிஸ்தவர்கள் தங்கள் **இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டதையும்** அறிவேன்.

ஜாமக்காரன் வாசகர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புவது ரோ. 15:4 **தேவ வசனத்தினால்** உண்டாகும் **பொறுமையினாலும், ஆறுதலினாலும்** நாம் **நம்பிக்கை உள்ளவர்களாகும்படிக்கு** முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு **போதனையாக** எழுதியிருக்கிறது. முன்பு என்ன எழுதியிருந்தது ! என்பதை அந்த அதிகாரத்தின் மேல் பகுதியில் 14,15 அதிகாரங்களை வாசித்தால் விளங்கும்.

ஆக இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலைகளில் நமக்கு **பொறுமை** உண்டாயிருக்க வேண்டும். ஒன்று போனால் மற்றொன்று என்று அடுத்து அடுத்து **கஷ்டங்களை அனுபவித்த** ஒரு விசுவாசி கர்த்தரில் நிலைத்திருக்க **தேவ வசனத்துக்கு** கீழ்படிந்திருந்தால் **வசனம் நம்மை** முறுமுறுக்காத **பொருமையை** கற்றுத்தரும். எந்தெந்த வசனத்துக்கு நாம் **கீழ்படிய வில்லையோ,** அதை தற்பரிசோதனை செய்து சரிசெய்துகொண்டால் **பொறுமையை** அந்த வசனங்கள் மூலமாக நமக்கு கிடைக்கும். வேதத்தில் பல பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் உண்டான சோதனையில் அவர்கள் அதை எப்படி மேற்கொண்டார்கள். தாங்கிக்கொண்டார்கள், சகித்துக்கொண்டார்கள் என்பது நமக்கு நல்ல பாடமாக அமைந்திருக்கும். அந்த வேத வசனத்தில் **பொறுமையை** மட்டும் கர்த்தர் நமக்கு கற்றுத்தரவில்லை. அதோடு ஆறுதலும் நமக்கு உண்டாகும். யாராவது மரித்துப் போயிருந்தால் அல்லது வேலையிழந்து போயிருந்தால், திருமணம் தடைபட்டிருந்தால், கிடைத்த வேலையில் போய் சேர முடியாதபடி வாகனங்கள், விமானங்கள் எதுவும் இயங்காது நாடே ஸ்தம்பித்த நிலையில் உங்கள் ஆசை எதிர்பார்ப்பு எல்லாம் தகர்ந்துவிட்ட நிலையில், அந்த வேலைக்காக வாங்கிய கடனை எப்படி அடைப்பேன்

என்ற பயம் கலந்த கவலை வாட்டி வதைக்கும்போது நம் **ஆறுதலின்** தெய்வம் தான் எழுதிய **வசனத்தின்** மூலமான ஒரு நல்ல **ஆறுதலை** நமக்கு தருவார்.

சொந்த வீட்டில் கூடபிறப்புகள், உறவினர்கள் நண்பர்கள் கைவிரித்த நிலையில் நீங்கள் கலங்கிபோக மாட்டீர்கள். வசனத்தில் கீழ்படிந்ததால் கர்த்தரின் **ஆறுதலை** பெருவீர்கள். அந்த **ஆறுதல்** உலகம் கொடுக்கிறவிதமாக இருக்காது. உலகம் கொடுக்காத பணம், பதவி, திருமணம், பிரமோஷன் இப்படிப்பட்ட உலக பிரகாரமான விஷயங்களைத்தான் **உலகம் கொடுக்காத சமாதானம்** என்று இயேசு கூறுகிறார். உங்களுக்குள் உண்டான அந்த சமாதானம் சொந்த மனைவி, கணவர், பிள்ளைகள் உறவினர் யாருடைய கண்களுக்கும் தெரியாது. அவர்களெல்லாம் அழுவார்கள், கலங்கிப் போவார்கள், ஆனால் நாமோ அவர்களால் பார்க்க முடியாத **சமாதானத்தை** பெற்று ஆறுதலையும் இயேசு கிறிஸ்து நமக்குள் அருளுவார். இது வித்தியாசமான அனுபவம் அந்த அனுபவத்தில் மரண பயம் இருக்காது, **கடனை எப்படி கட்டுவோம்** என்ற **கலக்கம்** இருக்காது, இந்த அனுபவத்தை எழுதுகிற நான் அனுபவதித்திருக்றேன். நீங்களும் அனுபவிக்க முடியும் அதற்கு ஒரே வழி **தெய்வ வசனத்தில்** மேல் உங்களுக்கு **நம்பிக்கை** உண்டாயிருக்க வேண்டும். அந்த நம்பிக்கையானது வசனத்துக்கு நீங்கள் கீழ்படிந்தால் மட்டுமே உங்களுக்கு கிடைக்கும்.

கடந்த வருடம் 2020ல் அனுபவித்த வேதனைகள் எதுவும் 2021 நீங்கள் அனுபவிக்கமாட்டீர்கள். **வனத்துக்கு கீழ்படிய வேண்டும்.** வசனத்தில்மேல் நம்பிக்கை உண்டாகவேண்டும். அந்த **வசனத்தை** எழுதிய தெய்வம் **வார்த்தை மாறுகிறவரல்ல, பொய் பேசுகிறவர் அல்ல. பொய் பேச** அவர் ஒரு **மனிதனல்ல** என்று வேத வசனம் தெளிவாக அறிவிக்கிறது.

2021ம் வருடம் உங்கள் யாவருக்கும் புதுவித ஆவிக்குரிய சந்தோஷம் உண்டாக்கும். எப்போதும் **உங்களைவிட உயர்ந்த** நிலையில் உள்ளவர்களை, அவர்கள் கூட பிறந்தவர்களாலும் சரி **அவர்களை பார்க்கவேண்டாம்.** அவர்களோடு **உங்களை ஒப்பிட வேண்டாம்.** கர்த்தர் உங்களுக்கென்று தனி பாதையை அமைத்திருக்கிறார். அதில் கர்த்தரோடு பயனிப்பீர்கள்.

கர்த்தர் தாமே வாசகர்கள் யாவரையும் ஆசீர்வதித்து **உலகம் தராத சமாதானத்தை உங்கள் எல்லாருக்குள்ளும் தந்து** சந்தோஷத்தோடு வாழ வைப்பாராக. ஆமென்.

வாசகர்கள் அனைவருக்காவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன். டாக்டர் **புஷ்பராஜ்**

**நீங்கள் அனுப்பிய காணிக்கைக்கு நன்றி.**

வெளிநாட்டில் வசிக்கும் வாசகர்களுக்கு ஜாமக்காரன் பத்திரிகை 6 மாதங்களாக விமான சர்வீஸ் இல்லாதபடியால் உங்களுக்கு அனுப்ப முடியவில்லை. ஆகவே ஜாமக்காரனில் முதல் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கும் www.jamakaran.com என்ற (website ) வெப்சைட்டில் பார்த்துக்கொள்ளுங்கள். அக்டோபர் – நவம்பர் மாதம் வரை ஜாமக்காரனை வெப்சைட்டில் அனுப்பிவிட்டோம். நீங்கள் Swift Code மூலமாக இந்தியாவில் உள்ள State Bank - Canara Bank வழியாக அனுப்பிய காணிக்கையும் வந்து சேர்ந்தது. நன்றி.

உங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

# பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய வேத வசன விளக்கங்கள்

**ஜாமக்காரன் :** 1965ம் வருடம் முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த என் கூட்டங்களில் தலைமை ஏற்று சகோ. D.T. Raja அவர்களுக்கும் எனக்கும் சிறந்த ஆவிக்குரிய நன்பரான சகோ.Y.ஜோன்ஸ் அவர்கள் பலகாலமாக பரிசுத்த ஆவியாவைரைப்பற்றிய பல்வேறு சங்தேகங்களுக்கு பல பத்திரிக்கைகளில் பதில் எழுதிய கட்டுரைகளின் ஒரு தொகுப்பை வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறேன். நல்ல வேத பண்டிதர்களில் ஒருவரான சகோ. Y. ஜோன்ஸ் அவர்களுக்காக ஜெபித்துக் கொள்வோம்

## பரிசுத்த ஆவியானவர் எல்லாருக்கும் தேவை

1. ஆவியானவர் **அவிசுவாசிகளுக்கும்** தேவை.
2. நாம் **இரட்சிக்கப்பட** ஆவியானவர் தேவை.
3. நாம் **இரட்சிக்கப்பட்டவர்களாயிருக்கிறோமா** என்பதைஅறியவும் ஆவியானவர் தேவை.

நாம் இரட்சிக்கப்பட்டோம். அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று நமக்கு எப்படித் தெரியும் ? நாம் இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொண்டு விசுவாசித்த போது நம்முடைய **சரீரத்தில் எந்த** மாற்றமும் வரவில்லை. **உள்ளான மனிதனில்** ஏற்பட்ட மாற்றம் நம்முடைய **ஜீவியத்தில் வெளிப்பட வேண்டும்.** பல சமயங்களில் அப்படியில்லாதபடி நம்முடைய பழைய மனிதனுடைய செய்கைகள் பழைய சுபாவங்கள் காணப்படுகிறதல்லவா? பிறர் நம்மோடு பேசும் போது, நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் என்பதை பல சமயங்களில் நாம் தெளிவுபடுத்த முடியாதவர்களாய் காணப்படுகிறோமல்லவா? அப்படி இருந்தும் நாம் இரட்சிக்கப்பட்டோம் என்றும் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்றும், நாம் எப்படி தொடர்ந்து நம்பி கொண்டிருக்க முடிகின்றது? இந்த நம்பிக்கைக்குத்தான் **பரிசுத்த ஆவியானவர்** நமக்குத் தேவை.

அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். (யோ:1:12) என்றும் **அவருடைய ஆவியில்லாதவன்** அவருடையவன் அல்ல என்று ரோ. 8:9ல் கூறப்பட்டிருப்பதையும் படிக்கும் போது, **ஆவியானவர் நமக்குள்** வருவதால் மாத்திரமே நாம் அவருடைய பிள்ளைகள் என்று அறிகிறோம்.

மேலும் ரோமர் 8:16ல் நாம் தேவனுடையப் பிள்ளைகளாயிருக்கிறோமென்று **ஆவியானவர்** தாமே **நம்முடைய ஆவியுடனே** சாட்சி கொடுக்கிறார் என மிகத் தெளிவாக

கூறப்பட்டுள்ளது. அவ்வாறே யோவான் அப்போஸ்தலன் கூறும்போது அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் **நமக்கு தந்தருளின ஆவியினாலே** அறிந்திருக்கிறோம். 1 யோ. 3:24 மேலும் அவர் தம்முடைய ஆவியை நமக்குத் தந்தருளினதினாலே நாம்அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். ஆங்கில வேதாகமத்தில் He has put His brand upon us - His mark of ownership - and given us His Holyspirit in our hearts as guarantee. That we belong to Him. II Cor. 1:22. 1 யோ 4:13 ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை (நம்மை) ஓரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.

இதைக் குறித்து பரிசுத்த ஆவியானவரும் நமக்கு சாட்சி சொல்லுகிறார் எபி. 10:14,15 பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது (2 கொரிந். 1:22)ல் நம்முடைய இருதயங்களில் **ஆவியென்னும் அச்சாரத்தைக்** கொடுத்திருப்பதாகக் கூறினார். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினாலேயே அவரை அப்பா என்று கூப்பிடப்பண்ணுகிற **புத்திர சுவீகாரத்தின் ஆவியைப்** பெற்றிருக்கிறோம்.

புறஜாதி மக்களும் யூதர்களும் ஒன்றுபோல் ஆண்டவரை விசுவாசித்தபோது அவர்களை இரட்சிக்கிறார் என்பதை அப். 15:8மல் காணலாம். நமக்கு பரிசுத்த ஆவியைத் தந்ததுபோல, அவர்களுக்கும் தந்தருளி அவர்களைக் குறித்து சாட்சி கொடுத்தார். மேலும் நமக்கு ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கும் பெரிதான இரட்சிப்பைக் குறித்து தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்தார் என எபி. 2:4ல் கூறப்பட்டுள்ளது.

நமக்கு நித்திய ஜீவன் உண்டாகும் என்ற நம்பிக்கையை நாம் எப்படி அறிகின்றோம் ? ஆண்டவர் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாக பொழிந்ததினாலேயே தீத்து., 3:6,7 மேலும் யோவான் சுவிசேஷத்தை எழுதும்போது இயேசுவை **தேவ குமாரனாகிய கிறிஸ்து** என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தனாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டடிருக்கிறது. (யோ. 20:31) என கூறப்பட்டுள்ளது. அவர் தேவ குமாரன் என்றும் அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்றும் நாம் அறிவது எப்படி ? யோவான் தன் நிரூபத்தை எழுதும் போது இதனை 1யோ 5:9-13ம் உள்ள வசனங்கள் வரையிலும் உள்ள பகுதியில் இதனை விளக்கின்றார். தேவ குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் **அந்த சாட்சியை தன் இருதயத்தில் கொண்டிருக்கிறான்.** 5:10. எனவே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றும. நமக்கு நித்திய ஜீவன் உண்டென்றும். நம் திட்டமாய் அறிய **விசுவாசத்தில் நிலை நிற்க பரிசுத்த ஆவியானவர்** நமக்கு உதவி செய்கிறார். ஆகவேதான் நாம் **இரட்சிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம்** என்று அறிய **அவியானவர் தேவை** என்று அறிகிறோம். ■

# அந்நிய பாஷை

குறிப்பு : அன்னிய பாஷைப்பற்றிய புஸ்தகம் விரைவில் வெளிவர இருக்கிறது. திருத்தவும் அதை ஒழுங்கு பண்ணவும் **பொருப்பெடுத்துள்ள சகோதரர்** தன் ஊழிய பொருப்பின் நடுவிலும், பெரும் பாரம் கொண்டு அந்த புத்தகம் சீக்கிரம் வெளிவர முயலுகிறார். அவருக்காக ஜெபிப்போம். அந்த புத்தகம் வாசகர்களாகிய உங்கள் கைகளில் தற்காலிகமாக அந்நிய பாஷை பற்றியும் பரிசுத்தாவியானவரை பற்றியும் மற்ற ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களையும் வாசகர்கள் அறியவேண்டும் என்பதற்காக இம்மாத செய்திகளையும் பரிசுத்தாவியானவரை பற்றியதாக தொகுத்து வெளியிட்டுள்ளேன்.

நாங்கள் பேசுவது தூதர் பாஷைகள், ஆதலால் அது உங்களுக்குப் புரியாது என கூறி பெருமைப்படுகிறவர்கள் பலருண்டு. அதனால் அதைக் குறித்தும் நாம் ஆராய்ந்து பார்ப்பது நல்லது. தூதர் பாஷை என்ற சொல் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே காணலாம். 1 கொரி 13:1ல் தூதர் பாஷைகள் என்ற பதம் வருகிறது. இந்த அதிகாரம் முழுவதையும் நாம் படிக்கும்போது, அன்பின் மேன்மையைக் குறித்து கூறுவதாக அறியலாம். 12ம் அதிகாரத்தில் வரங்களைக் குறித்து விரிவாய் கூறியபின் இறுதியாய் கூறும் காரியத்தைக் கவணிக்க வேண்டும். இன்னும் மேன்மையான வழியை உங்களுக்கு காண்பிப்பேன் என கூறியபின். 13ம் அதிகாரத்தில் அந்த மேன்மையான அன்பு கூறுதலை பற்றி கூறுகிறார். இப்போது கொரிந்து சபையில் அன்பு இல்லாமல்போனது. பிரிவினைகள் வாக்குவாதங்கள், பொறாமை என அன்பற்ற நிலையல் காணப்படும் மக்களுக்கு அன்பாயிருப்பதன் தேவையை வலியுறுத்தி எழுதுகிறார். மனுஷரால் செய்தற்கறிய காரியங்களை செய்துவிட்டாலும், அன்பு இல்லையென்றால் எந்த பயனும் இல்லை என்பதே இதன் சாரம்.

மேலும் சில காரியங்களை நாம் கவணிக்க வேண்டும். தூதர்களுக்கு எந்த பாஷைகள் உண்டு ? பாபேலில் மனுஷர் பேசிய ஒரே பாஷையை ஆண்டவர் தாறுமாறாக்கியதுபோல் தூதர்களுக்கு எப்போதாவது சம்பவித்ததுண்டோ? பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் தூதர்கள் வந்து மனுஷரிடம் பேசினதாக நாம் படிக்கின்றோம். அப்போதெல்லாம் அதை கேட்டுக்கொண்டிருந்த மக்கள் பாஷை எதுவோ ! அதே பாஷையிலேதானே பேசினதாக நாம் படிக்கிறோம். தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், அவர் தம்முடைய தூதனை அனுப்பி ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷமாகிய ஒரு முழு

புத்தகமே நம்மிடம் இருக்கிறதே ! அதை தூதர் பாஷையில் வெளிப்படுத்தினானா ? அல்லது யோவானுக்குப் புரியும்படியான பாஷையில் வெளிப்படுத்தினானா ?

எனவே, எவருக்கும் புரியாத சில வார்த்தைகளை திரும்பத் திரும்ப கூறிக்கொண்டிருந்து, நாங்கள் தூதர் பாஷைகளை பேசுகிறோம் என்பது சுத்தப் பொய்யாகும். மேலும் பரலோகத்துக்குச் சென்று அங்குள்ள தூதர்கள் பேசுவதை யாராகிலும் கேட்டதுண்டானால், அது அப்போஸ்தலனாகிய பவுலாக மட்டுமே இருக்கமுடியும். அந்த வேத பகுதியையும் சற்று பார்க்கலாம். 2 கொரி 12:2,3ம் வசனங்களில் இது கூறப்பட்டுள்ளது. பவுல் மூன்றாம் வானத்திலுள்ள எடுத்துக்கொள்ளப்பட்டார் (பரதீசுக்கு) அங்கு அவர் மனுஷரால் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டான் என குறிப்பிடப் பட்டுள்ளது. இங்கு சில காரியங்களை நாம் கவணிக்க வேண்டும்.

அது என்ன பாஷை என்று கூறப்படவில்லை. என்ன வார்த்தைகள் என்றோகூட அங்கு கூறப்படவில்லை. ஒருவேளை பவுல் **தூதர்கள் பேசுவதைக்கூட** கேட்டிருக்கலாம். ஆனால் அது **என்ன பாஷை** என்று கூறப்படவில்லை. மேலும் அந்த வசனத்தை பல மொழியாக்கங்களில் நான் பார்த்தபோது ஆச்சரியப்பட்டேன். கீழே சில மொழியாக்கங்களை குறிப்பிடுகிறேன். கவனித்துப்பாருங்கள். நம்முடைய கைகளில் இருக்கும் தமிழ் வேதாகமத்தில். "மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகள்" என காண்கிறோம். ஆக்கிலத்தில் **King James Version,** "Heard **unspeakable** words. which is not **lourful for a man** to other என்றும் **New Kings version**னில் "hearal **inexpressible words** which is not **lawful for a man** to utter" **New English Bible.** Heard words **so secret** that **human lips may not repeat them"**

R.C. (கத்தோலிக்கர்) Tamil Bible "**மனித மொழிக்கு எட்டாத** சொற்களை **மனிதன் திருப்பிச் சொல்லக்கூடாத சொற்களைக்** கேட்டான். **திரு. விவிலியம் பொது** மொழிபெயர்ப்பில், "மனிதரால் உச்சரிக்கவும், சொல்லவும் முடியாத வார்த்தைகளை சொல்லக் கேட்டான் N.I.V. Version **-** " He heard **inexpressible** things that man is **not permitted t**o tell"

மேலே குறித்துள்ள வசனங்களைப் படிக்கும்போது நாம் ஒரு காரியத்தை திட்டமாக அறிய முடிகிறது. பரதீசில் பவுல் கேட்ட வார்த்தைகள் தூதர் பாஷையாயிருந்தாலும். மற்றெதுவாயிருந்தாலும் அதை கேட்ட **மனுஷர் மறுபடியும் சொல்ல முடியாததும் சொல்லக்கூடாததுமான வார்த்தைகள்** என்பது தெளிவாயிருக்கிறது. எனவே இன்று யாராகிலும் தாங்கள் பேசுவது **தூதர்பாஷை** என்று கூறினால் அது வேத விதிகளுக்கு மாறானது என்றும் அவர்கள் பொய் **சொல்லுகிறார்கள்** என்றும் தெரிந்துகொள்ளலாம். ●

# மூன்று பெரிய பாவங்கள்

பாவங்கள் ஏராளம் இருக்கும்போது மூன்று பாவங்கள் என்றால் என்னவென்று ஆச்சரியப்பட வேண்டாம். குறிப்பாக மூன்று பாவங்களைக் குறித்து அறிந்திருப்பது நல்லது.

1. **பரிசுத்த ஆவிக்கு** விரோதமான பாவம்
2. **மன்னிக்கப்பட முடியாத** பாவம்
3. **மரணத்துக்கு ஏதுவான** பாவம்.

இம்மூன்றைக் குறித்தும் நாம் தெளிவாக படித்தும் அறிந்திருப்பதும் நல்லது. இவ்வறிவு விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் மிகவும் பயனுள்ள பாடமாகும். இவற்றை தெளிவாக அறிவதன் மூலமாக நமக்கு ஏற்படக்கூடிய பல தேவையற்ற சந்தேகங்கள் மறையும். கர்த்தருடைய வசனத்தின் மூலம் நம்முடைய விசுவாசத்தை இன்னும் அதிகமாக உறுதிப்படுத்தலாம்.

## I) பரிசுத்த அவிக்கு விரோதமான பாவம் :

இப்பாவும் என்ன **அல்ல** என்தையும், நாம் திட்டமாக அறிந்துகொள்ள வேண்டும். நம்மில் அநேகர் ஆவியானவர் **திருத்துவத்தில் ஒருவர் அல்ல** என்று கூறக்கூடும். அல்லது **ஆவியானவர் தேவன் அல்ல** என்று கூறலாம். இவர் ஒரு **நபர் அல்ல, ஒரு சக்தி மட்டுமே** என்றும் சிலர் நினைக்கலாம். **ஆவியின் வரங்கள்** ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைகூட ஒத்துக் கொள்ளலாமல் இருக்கலாம். **ஆவியின் அபிஷேகம் ஞானஸ்நானம், நிறைவு, அந்நிய பாஷை** போன்ற **வரங்கள்** இவற்றைப்பற்றி பல குழப்பமான அபிப்பிராயங்கள் உடையவர்களாயிருக்கலாம். குறிப்பிட்ட இவை ஒன்றும் **ஆவியானவருக்கு விரோதமான பாவம் அல்ல.** மேலும் **இப்பாவத்தை** ஆவியானவருக்கு விரோதமான **தூஷனம்** என்றும் கூறப்பட்டுள்ளது (மத். 12:31,32, மாற்கு 3:28,29 லூக்கா. 12:10) ஆகிய வசனங்களில் இப்பாவத்தைக்குறித்து கூறப்பட்டுள்ளது.

ஆண்டவர் இதைக்குறித்து கூறிய சந்தர்ப்பத்தையும் கவனிக்க வேண்டும். ஆண்டவர் இப்பூமியில் இருந்தபோது, பிசாசுபிடித்த குருடும் ஊமையுமான ஒருவனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். குருடும் ஊமையுமானவன் **பேசவும் காணவும்** தக்கதாக அவனை

சொஸ்தமாக்கினார். ஜனங்கள் எல்லாரும் தாவீதின் குமாரன் இவர்தானோ என்று ஆச்சரியப்பட்டார்கள். பரிசேயர் அதைக்கேட்டு இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினாலே பிசாசுகளைத் தூரத்துகிறானேயல்லாமல் மற்றபடி அல்ல என்றார்கள். இவ்வாறு கிறிஸ்து ஆவியின் வல்லமையினால் பிசாசுகளைத் துரத்தும்போது அது ஆவியானவரின் கிரியை அல்ல என்று அது பெயல்செபூலினாலே என்று துணிந்து கூறினார்கள். **பரிசேயர்** இயேசுகிறிஸ்துவையும் அவருடைய வல்லமையையும் **அறிந்திருந்தும்** மனப்பூர்வமாய் **ஆவியானவரை பெயல்செபூல்** என்றார்கள். இதுவே அவர்கள் **ஆவியானவருக்கு விரோதமாய்** சொன்ன தூஷனமாயிருந்தது. இந்த நிகழ்ச்சியை தெளிவாக மனதில் வைத்து சிந்திக்க வேண்டும். (1) இது **பரிசேயக் கூட்டத்தார் செய்த பாவம்.** (2) இது ஆண்டவர் சரீரப்பிரகாரமாக இவ்வுலகில் ஜீவித்த நாட்களில் **அம்மக்கள் செய்த பாவம்.**

ஆகவே அந்த பாவத்தை இன்று நாம் அதே நிலையில் செய்ய இயலாது. காரணம் ஆண்டவர் **சரீரப்பிகாரமாக** இப்போது **நம்மிடையே இல்லை.** மேலும் அவர்கள் **ஆண்டவரை அறிந்தும்** மனப்பூர்வமாக செய்த பாவம். இப்பாவத்துக்கு விளக்கம்கொடுக்கும்போது திட்டமான வேதத்தின் இதர பகுதிகளில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்களுக்கு பாதகம் இல்லாமல் சிந்திக்கவேண்டும். **இவர்கள் பரிசேயக் கூட்டத்தார்** என்று பார்த்தோம். ஆனால் அப்போஸ்தலனாகிய **பவுலும் ஒரு பரிசேயன்**தான். ஆண்டவருக்கும் சபைக்கும் எதிராக செயல்பட்டவன். ஆயினும் அவைகளை **அவன் அறியாமல் செய்ததாக** நாம் காண்கிறோம். முன்னே நான் **தூஷிக்கிறவனாயும்** துன்பப்படுத்துகிறவனாயும், **கொடுமை செய்கிறவனாயும்** இருந்தேன். அப்படி இருந்தும் **நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே** அப்படி செய்தபடியால் கர்த்தரிடம் **இரக்கம் பெற்றேன்** என்றான் (1 தீமோ 1:13) யூதர்கள் பலரும் கொரிந்துவில் பவுல் வந்தபோது, அவர்கள் அவனை எதிர்த்து தூஷித்தபோது அவன் (பவுல்) தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு **உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின்மேல் இருக்கும்** என்றான். (அப்போ. 18:6)

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை இரட்சிக்கும் என்பதுதான் உண்மை. அவர் சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். (1 யோ. 1:7, 2:2) ஆகவே **தெரிந்தும் மறுதலிக்கிறவர்கள்** மனந் திரும்புவதற்கு ஏதுவாய் அவர்களை **மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்** (எபி. 6:6) ஆண்டவர் மன்னிக்க மனமில்லாதவரோ ! அல்லது முடியாதவரோ ! அல்ல. **மனந்திரும்ப மனதில்லாமல்** மனப்பூர்வமாக எதிர்க்கிறவர்களையும் தூஷிக்கிறவர்களையும் ஆண்டவர் மன்னிப்பது எப்படி?

எனவே இன்று நாம் யாராயினும் அப்படி ஒரு மன்னிக்கப்பட முடியாத பாவத்தைச் செய்து விட்டேனே என்று உணர்ந்தால் **மனம் குழம்ப** வேண்டாம். ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்கும்போது ஆண்டவரால் மன்னிக்க முடியாத எந்தப் பாவமும் இல்லை என்று அறியுங்கள்.

### 2) மன்னிக்கப்பட முடியாத பாவம்.

அப்படியும் **ஒரு பாவம்** இருக்கிறதோ? அதையும் நாம் அறிய வேண்டும். பொதுவாக **எல்லா பாவங்களையும் தேவன் மன்னிப்பார்** என்பது உண்மை. ஆயினும் **ஒரே ஒரு பாவத்தை மட்டும்** தேவன் மன்னிப்பதில்லை. ஆகவே அதைத்தான் **மன்னிக்கப்பட முடியாத பாவம்** என்று கூறுகின்றோம். எல்லா பாவங்களும் தண்டனைக்குரியதே. பாவத்தின் சம்பளம் மரணம் என்றும், பாவம் செய்கிற ஆத்துமா சாகும் என்றும் **வேதம்** திட்டமாய் அறிவிக்கிறது. மனிதன் செய்யும் சகல பாவங்களுக்கும் மன்னிப்பு வேண்டும். ஆகவே அதற்காகவே தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை இவ்வுலகுக்கு அனுப்பினார். நாம் மீறின எல்லா பாவங்களுக்கும் நியாயமாய் வரவேண்டிய தண்டனை முழுவதும் தேவன் அவர் மேல் சுமத்தி அவரை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார். ஆகவே மனுக்குலம் முழுவதுக்கும் அவர்கள் செய்த எல்லா பாவங்களுக்கும் **மன்னிப்பை வழங்க** அவருடைய **மரணம் போதுமானதாகும்.**

மனிதன் தான் செய்த பாவங்களுக்காகவே அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தர் என்று இருதயத்தில் விசுவாசித்தால் அவன் செய்த எல்லா பாவங்களும் மன்னிக்கப்படும். அவரை விசுவாசிக்காவிட்டால் நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதில்லை. அவரை விசுவாசிப்பது ஏன் அவ்வளவு முக்கியம் என்றால் அவர் யாராயிருக்கிறார் என்பதினாலேயே.

அவர் **உலகத்தை படைத்தார்** (கொலோ 1:16) **மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்** (யோ.1:14, 1 திமோ 3:16) **பாவிகளை இரட்சிக்க வந்தவர்.** (1 தீமோ. 1:15) **ஒரே இரட்சகர்** (அப்போ. 4:12) **மனிதனுக்கு பதிலாக மரித்தவர்** (1 பேதுரு. 3:18) பாவிகளுக்காய் மரித்தவர் (ரோமர் 5:8) மரணத்தை ஜெயித்தவர் (மத் 28:6) **வரக்கூடிய நியாயதிபதி** (யோ. 5:17 அப்போ.17:31.) ஆகவே **இயேசு கிறிஸ்துவை** விசுவாசிக்காவிட்டால் பாவ மன்னிப்பும் இரட்சிப்பும் இல்லை. **இதுவே மன்னிக்கப்பட முடியாத பாவம்.**

### 3. மரணத்துக்கு ஏதுவான பாவம்

தேவனுடைய பிள்ளைகள் தவறு செய்யும்போது அல்லது பாவம் செய்யும்போது நம்மை தள்ளிவிடாமல் நம்மை சிட்சித்து சீர்படுத்த விரும்புகிறார். தகாதவிதமாக தகுதியல்லாமல் அப்பத்திலும், ரசத்திலும் பங்குபெற கூடாது என்று நாம் அறிவோம். நம்மில் நாம் குறை கண்டால் **ஒதுங்கி இருக்க வேண்டும்** என்று கூறப்படவில்லை. எந்த மனுஷனும்

தன்னைத்தானே சோதித்து அறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பன்னக்கடவன் என்று கூறப்பட்டுள்ளது. **குறை** இருக்குமானால் நாம் ஆண்டவரிடம் **அறிக்கை செய்து** பாவ மன்னிப்புப் பெற்றுக்கொண்டு திருவிருந்தில் பங்கு கொள்ள வேண்டும். இல்லையேல் அதனால் **வரும் சிட்சைகளைக்** குறித்து கூறும்போது **மூன்று காரியங்கள்** கூறப்பட்டுள்ளது. **பெலவீனம், சுகவீனம், நித்திரை** இது **சரீர மரணத்தைக்** காட்டுவதாகும். 1கொரி. 5:2ல் பவுல் கூறியிருப்பதையும் பாருங்கள். **பாவம் செய்தவனுடைய** ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளில் மாம்சத்தின் அழிவுக்காக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் **அவனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு** செய்கிறேன் என்றார். எனவே இது **சரீர மரணத்தை** மட்டுமே காட்டுவதாகும். இரட்சிப்பு நஷ்டப்படுவதில்லை. இக்கருத்தையே 1யோ. 5:16,17 வசனங்களில் யோவான் கூறியிருக்கிறார். ஆகவே ஒரு விசுவாசி தொடர்ந்து பாவ வாழ்க்கையில் நிலைத்திருந்தால் **தேவ நாமத்துக்கு மகிமைக் குறைச்சலை** உண்டு பண்ணி கொண்டிருந்தால் அவன் **இனிமேல் பூமியில் இருந்தது போதும்** என்று ஆண்டவர் மரணம் மூலம் தன்னிடம் சேர்த்துக்கொள்வார். இது குறிப்பான ஒரு பாவத்தை கூறுவதும் அல்ல.

ஆகவே **பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்** அல்லது **தூஷணம்** என்பது கிறிஸ்து பூமியில் ஜீவித்த நாட்களில் **பரிசேயர் செய்த பாவம். மன்னிக்கப்படகூடாத பாவம்** என்பது **எல்லா அவிசுவாசிகளும்** செய்யும் பாவம், மரணத்துக்கு **ஏதுவான பாவம்** என்பது **விசுவாசிகளின் பாவம் ஆகும்.** இவற்றை தெளிவாக புரிந்துகொள்ள தேவன் தாமே கிருபை செய்வாராக.


## ONLINE BANKING (NEFT)

**Dr. M.G.E. PUSHPARAJ**, **SALEM - 636 005. INDIA**

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842** SWIFT CODE - SBININBB637- 10764116842

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** SWIFT CODE - CNRB0001219 -1219101013622.

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

# பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது யாருக்கு ?

அநேகர் கர்த்தருக்கு கீழ்ப்படிகிற எல்லோரும் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றதைபபோல் **பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம்** பெறுகிறார்களென்றும் அதை அவர்கள் பெற்றே ஆகவேண்டும் என்றும் நம்புகிறார்கள். இதை நம்பிக்கொண்டு, அப்படி ஞானஸ்நானம் பெற்றால்தான் **அப்போஸ்தலர்கள்** தங்கள் நாட்களில் செய்ததுபோல **அற்புத அடையாளங்கள்** செய்யும் வல்லமையைக் **கொடுக்கிறது** என்றும் முடிவுக்கு வருகிறார்கள். இதை அவர்கள் **ஒத்துக்கொள்வதற்கும்** மற்றவர்களை **ஒத்துக்கொள்ள வைப்பதற்கும்** அப். 2:1-4ல் அப்போஸ்தலர்கள் **பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை** பெற்றதுபோல அப். 1:15ல் 120 விசுவாசிகளும் **பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்** பெற்றுக்கொண்டார்கள் என்ற வசனத்தை காட்டி நிரூபிக்க முயற்சி செய்கிறார்கள்.

தயவுசெய்து கீழ்வரும் கேள்விகளையும் பதில்களையும் ஆழமாக சிந்தித்துப் பாருங்கள்.

**கேள்வி :-** நம்முடைய கர்த்தர் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்வதற்கு முன்பாக **தேற்றரவாளன்** அல்லது **பரிசுத்த ஆவியானவரை** யாருக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்?

**பதில்:-** இயேசு கிறிஸ்து அப்போஸ்தலரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். **பிதாவினிடத்திலிருந்து** நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து **புறப்படுகிறவருமாகிய** சத்திய ஆவியான **தேற்றரவாளன்** வரும்போது அவர் என்னை குறித்து சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதி முதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். இங்கே கவணியுங்கள் அங்கு கூடியிருந்த அந்த 120 பேரில் ஒருவர் கூட **ஆதி முதல்** கிறிஸ்துவுடனே கூட இருக்கவில்லை. (யோவான் 15:26,27)

மறுபடியும் இயேசுவோடு கூடியிருந்த **பதினோரு அப்போஸ்தலர்களிடம்** அவர் பேசும்போது இந்த இடத்தில் **இந்த சம்பவம் இயேசு பரமேருவதற்கு முன்பாக ஒலிவ மலையில் நடந்த சம்பவம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.** இப்படியாகச் சொன்னார். என் பிதா வாக்குதத்தம் பண்ணினதை இதோ நான் உங்ளுக்கு அனுப்புகிறேன். நீங்களோ

உன்னத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா. 24:49) அப். 1:8யும் வாசித்துப் பாருங்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் ஒன்றாம் அதிகாரத்தில் **அந்த 120 பேரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்ஸ்நானம் பெற்றார்களா?**

அப்போஸ்தலர்களுடைய நடபடிகள் ஒன்று மற்றும் இரண்டு அதிகாரங்களை ஒருவர் வாசிக்கும்போது இந்த அதிகாரங்களின் மைய கதா பாத்திரம் **அப்போஸ்தலர்கள்தான்** என்பதைக் காணமுடியம். பழங்காலத்து அசல் தோல் சுருள்களில் அதிகாரங்ள் வசனங்கள் எனப்பிரிக்கப்படாமல் எல்லாம் ஒன்றாகத்தான் இருந்தது. இபபோது நம்முடைய கைகளில் கொடுக்கப்ட்டுள்ள பரிசுத்த வேதாகமத்தில் அப். 1:26ல் **மத்தியா** யூதாஸ்காரியோத்துன்கு பதிலாக தெரிந்தெடுக்கப்பட்டு பதினோரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான். இதற்கு பிறகு இரண்டாம் அதிகாரம் எனப் பிரிக்கப்பட்டு. இப்படியாக நாம் வாசிக்கிறோம். **பெந்தேகோஸ்தே** என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் **பரிசுத்த ஆவியினாலே நிறப்பப்பட்டு** ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே **வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்** (2:1,4)

அதைக்கேட்ட எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு ஒருவரையொருவர் பார்த்து. இதோ பேசுகிற இவர்ளெல்லாரும் கலிலேயரல்லவா? என்று கேட்டார்கள். (2:7) ஆனால் அவர்கள் கூறுகிறபடி அந்த 120 பேர் எல்லாருமே **கலிலேயர்ளாயிருந்திருக்க முடியாது.** ஆனால் **அப்போஸ்தலர்கள் கலிலேயாவைச் சேர்ந்தவர்கள்.** பரிசுத்த ஆவியானவரின் **ஞானஸ்நானம் இவர்களுக்குத் தான் வாக்குதத்தம் பண்ணப்பட்டது.** இவர்கள்தான் பரிசுத்த ஆவியின் **வரத்தை** அற்புத விதமாகப் பெற்றுக்கொண்டார்கள்.

**கேள்வி :- அப். 2:38ல் திரளான ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியின் வரமும், அற்புத அடையாளங்கள் செய்ய வல்லமையுள்ள பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் ஒன்றா?**

**பதில் :-** இல்லை இது கீழ்ப்படிந்தவர்களுக்குள்ளே ஆவிக்குரிய ஜீவன் புதுப்பிக்கபடுகிற ஒரு நிகழ்வாகும். வேத வசனங்களின் அடிப்படையில் **ஞானஸ்நானம்** பெறும் யாவரும் **பரிசுத்த ஆவியின் வரத்தை** பெறுவார்கள். (அப். 5:32)

சில மக்கள் பெந்தேகோஸ்தே நாளிலே எல்லா விசுவாசிகளுமே அற்புத அடையாளங்கள் செய்யத்தக்கதாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் அப். 6:3-6 வசனங்களில் ஒரு **விசேஷித்த**

**வேலைக்காக ஏழு சீஷர்கள்மேல்** மட்டும் அப்போஸ்தலர்கள் ஏன் **கைகளை வைத்து** ஜெபம் பண்ண வேண்டியதாயிருந்தது ?

உண்மையில் **அப்போஸ்தலர்கள் மாத்திரமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை** பெற்றிருந்தனர். மற்றவர்கள் எல்லாரும் **தண்ணீர் ஞானஸ்நானம்** மாத்திரம் பெற்றார்கள். அதன் விளைவாக பாவ மன்னிப்பை பெற்றார்கள். அது மாத்திரமல்ல பரிசுத்த ஆவியானவர் அவர்கள் இருதயங்களில் வாசம் செய்தார். எனவே அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே **அற்புத அடையாளங்கள்** செய்யும் வல்லமை இருந்தது. அப். 1:15ல் நாம் பார்க்கின்ற **120 சீஷர்களோ** அல்லது அப். 2:41ல் நாம் பார்க்கின்ற 3000 **ஜனங்களோ** அப்போஸ்தலர்கள் பெற்றது போல **பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை** பெறவில்லை என்பதை அறியவேண்டும்.

ஆயினும் அப். 6:1-8 வசனங்களில் நாம் பார்க்கும்போது **பந்தி விசாரனை** செய்ய ஏழு பேரை தெரிந்தெடுக்க வேண்டும் என்று அப்போஸ்தலர்கள் சொன்னபோது அந்த ஏழு பேரும் நற்சாட்சி பெற்றவர்களும் **பரிசுத்த ஆவியும்** ஞானமும் நிறைந்தவர்களுமாய் காணப்பட வேண்டும் என்று சொன்னார்கள்.

அந்த ஏழு பேரும் அப். 2:38ல் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட **பரிசுத்த ஆவியின் வரத்தை ஏற்கனவே பெற்றிருந்தார்கள்** என்பது இதன் மூலம் தெளிவாகிறது. அனால் அவர்கள் பரிசுத்த ஆவியின் முலமாக **அற்புத அடையாளங்கள்** செய்யும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. இந்த ஏழு பேரும் தெரிந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்கள். அவர்கள் மேல் **கைகளை வைத்து** ஜெபம் பண்ணினபோதுதான் **அந்த ஏழு பேரும் அற்புத அடையாளங்கள்** செய்யும் வல்லமையை பெற்றார்கள் (அப். 6:8, 8:5,6)

**கேள்வி :- இன்றைய நாட்களில் கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெறுகிறார்களா?**

**பதில்** இல்லை! ஏனென்றால் அந்த விசேஷித்த **ஞானஸ்நானமானது** அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே வாக்குத்தத்தம் செய்யப்பட்டு அவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது. (இது **யூத ஜனங்களுக்கு அடையாளமாக** கொடுக்கப்பட்டது) அதைப்போல கொர்நேலிவு மற்றும் அவனுடைய வீட்டாருக்கும் **பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்** பெற்றார்கள், காரணம் **புற ஜாதிகளையும் தேவன் ஏற்றுக்கொள்கிறார்** என்பதற்கு அடையாளமாக இது கொடுக்கப்பட்டது. (அப். 10ம் அதிகாரம்) **இதைத்தவிர** வேறு யாரும் இந்த **பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை** பெற்றதாக **நமக்கு வசனங்கள் ஏதும் இல்லை.** அப்போஸ்தலர்கள் மட்டும் குறிப்பிட்ட சிலரை தெரிந்தெடுத்து **அவர்கள்மேல் கைகளை** வைத்து **அற்புத அடையாளங்கள்** செய்யும் வல்லமையை

அவர்களுக்கு கொடுக்கலாம். அப்படி வரம்பெற்றவர்கள் இந்த வரத்தை இவர்கள் வேறு யாருக்கும் கொடுக்கமுடியாது. (அப். 6:6, 8:14-17) இந்த உண்மையை நாம் அப். 5:12ல் காண்கிறோம். **அப்போஸ்தலருடைய** கைகளினாலே அநேக அடையாளங்களும், அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்தினால் பரிசுத்த ஆவி தந்தருளப்பட்டது. (அப். 8:18) பரிசுத்த ஆவியினால் அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையானது முதல் நூற்றாண்டில் சபை குழந்தை பருவத்தில் இருந்தபோது புதிய ஏற்பாடு எழுதப்பட்டு கொண்டிருந்தபோது வேத வாக்கியங்களை உறுதிப்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டது.

இன்றைய நாட்களில் ஜனங்கள் ஞானஸ்நானம் பெறும்போது எதைப் பெற்றுக்கொள்கிறார்கள் ?

**பதில் :** நாம் கர்த்தருக்கு கீழ்ப்படியும்போது நமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுகிறோம். தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருப்பதால் நமக்கு ஆவிக்குரிய ஜீவன் கிடைக்கிறது. (அப்.2:38, ரோமர் 8:9-11)

ஆனால் அதே சமயம் வட இந்தியாவில் ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம் செய்யும் மிஷனரிகள் வசனம் அறியாத, இயேசுவை ஏற்றுக்கொள்ளாத அந்த மக்களுக்காக அவர்களின் வியாதிக்காக மிஷனரிகள் ஜெபித்தபோது பல அற்புத சுகங்கள் ஏற்பட்டு அதன் மூலம் ஏராளமானவர்கள் இயேசுவே இரட்சகர் என்று ஏற்றுக்கொண்டு, தங்கள் வீட்டுக்குள் இருந்த விக்கிரகங்களையெல்லாம் தூக்க எரிந்து ஞானஸ்நானம் பெற்று இயேசுவை தங்கள் குல தெய்வமாக ஏற்றுக்கொண்டு, அவர்கள் ஆயிரக்கணக்கில் சபைளை எழுப்பியிருக்கிறார்கள்.

இதற்கு ஆதாரமாக மார்க்கு 16ம் அதிகாரத்தை கூறலாம். மாற்கு 16:17 வசுவாசிக்கிறவர் களால் நடக்கும் அடையாளங்களாவன என்று கூறி, இயேசு பல அடையாளங்களை கூறுவதை வாசிக்கிறோம். அவர்கள் பிசாசை துரத்துவார்கள், வியாதியஸ்தர்கள்மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தம் அடைவார்கள் என்று எழுதியுள்ளது. இன்னும் இப்படிப்பட்ட அற்புதங்கள் நடைபெறுகிறதை நானே அறிவேன்.

சரியான விசுவாசி சுகம்பெற ஊழியனை தேடி போவதில்லை, அவனுக்கு வசனம் தெரியும், வசனத்தின்படி ஜீவித்தால் அவன் வியாதி அவன் ஜெபத்திலேயே நீங்கிபோகும். நம்மை வழி நடத்த உறுதிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தை நம்மிடம் இருக்கிறது. (மாற்கு 16:20, யோவான் 20:30,31) மேலும் விசுவாசம் கேள்வியினாலே வரும் (ரோமர் 10:17) அற்புத அடையாளங்களை காண்பதினால் அல்ல.

# நான்கு சுவிசேஷ புஸ்தகங்களைக்குறித்த விவரங்கள்

**மத்தேயு,** மாற்கு, **லூக்கா,** யோவான் ஆகிய **நான்கு சுவிசேஷங்களை** ஆண்டவர் அவற்றிற்கு பொருத்தமான **நான்கு நபர்களைக்** கொண்டு எழுதினார் இவர்கள் நால்வரும் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை சரித்திரத்தை எழுதியிருப்பினும். அவற்றில் சில வித்தியாசங்கள் இருப்பதை நாம் காண்கிறோம். அவற்றின் நோக்கங்களையும், காரணங்களையும் விசேஷத்த தன்மையையும் நாம் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும்.

## மத்தேயு

முதலாவதாக இயேசு கிறிஸ்துவின் பிறப்போடு சம்பந்தப்பட்ட காரியங்களை கவணிப்போம், மத்தேயு **யூதருடைய ராஜாவை** குறித்து எழுதுவதால் **ராஜாவாக** இயேசு வருவதற்கு தேவையான இரு முக்கிய காரியங்களை தெளிவுபடுத்த **ஆபிரகாமின்** குமாரனாகிய **தாவீதின் குமாரன்** என ஆரம்பிக்கிறார். **யூதர் ஒருவனை ராஜாவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமானால்** அந்த நபர் **ஆபிரகாமின் சந்ததியில் உள்ளவராக இருக்க வேண்டும்.** அதிலும் **ஒரு யூதர் மட்டுமே யூதருக்கு ராஜாவாக வர முடியும்** மேலும் அந்த நபர் **தாவீதின் வம்சத்தில் உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.** ஏனென்றால் தாவீதுக்கு ஆண்டவர் வாக்குத்தத்தம் செய்தது. **உன் வீடும் ராஜ்யமும் என்றென்றைக்கும் எனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்** என்று 2 சாமு7:16ல் ஆண்டவர் கூறினார். பல சங்கீதங்கள் வழியாகவும் தாவீதுக்கு ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்ததை உறுதிசெய்திருக்கின்றார். குறிப்பாக சங். 89ல் கூறியதை பார்க்கலாம்.

என்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி **உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்போம் என்று ஆணையிட்டேன் என்றீர்.** சங். 89:4 என் உடன்படிக்கையை மீறாமலும் என் உதடுகள் விளம்பியதை மாற்றாமலும் இருப்பேன். ஒருவிசை என் பரிசுத்தத்தின் பேரில் ஆணையிட்டேன். சங் 89:34,35 மேலும் **ஈசாயின்** அடிமரத்திலிருந்து ஒரு துளிர்தோன்றி அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பி செழிக்கும் என ஏசா. 11:1ல் கூறப்பட்டுள்ளது. தாவீதுக்கு ஒரு **நீதியுள்ள கிளையை எழம்பப்பண்ணுவேன். அவர் ராஜாவாயிருந்து ஞானமாய் ராஜரீகம் பண்ணி பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்** என எரேமியா 23:5ல் **இயேசு கிறிஸ்துவை** குறித்து தீர்க்கதரிசனமாய் முன் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே **மத்தேயு** இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து

கூறும்போது அவர் **இயேசு ராஜாவை** குறித்து கூறுவதால் அதற்கு முக்கிய தேவையாகிய **ஆபிரகாமின்** குமாரனாயும், **தாவீதின்** குமாரனாக வெளிப்படுத்தும் **அட்வனைகளையும்** கூறுகின்றார்.

## மாற்கு

இரண்டாவது புத்தகமாகிய **மாற்கு** சுவிசேஷத்தை எழுதியவர் **மாற்கு என்பவர்.** இவர் **ஒரு ரோமன் ஆகும். ரோமாவிலிருந்து** எழுதுகிறார். இவர் இயேசு கிறிஸ்து **தேவனுடைய தாசன்** என்னும் அடிப்படையில் எழுதுகிறபடியால் **இயேசு கிறிஸ்வின் பிறப்பு சம்பந்தமான எதையும் இவர் குறிப்பிடவில்லை.** தாசனுக்கு **பணிதான் முக்கியமே** தவிர, அவர் எந்த ஊர், அவரின் பெற்றோர் யார் ? போன்ற எதுவும் முக்கியமில்லாதடியால், அவை ஒன்றையும் கூறாமல் நேரடியாய் இயேசுவன் ஊழியத்தை குறித்தே குறிப்பிடுகின்றார்.

## லூக்கா

மீகா தீர்க்கதரிசி கூறுவதுபோல் இயேசு **பெத்லகேமில் பிறப்பார்** என்னும் தீர்க்கதரிசனம். அவ்வாறே நிறைவேறியதை லூக்கா குறிப்பிடுன்றார். (லூக் 2:4-7) மேலும் அவர் **கன்னியிடத்தில் பிறப்பார்** என்தையும் **லூக்கா** குறிப்பிடுகிறார். (லூக் 1:27-31) இவை நிறைவேற தேவன் எவ்வாறு **சரித்திர சம்பவங்களை** ஆளுகைசெய்தார் என்பது மிகவும் ஆச்சரியமே.

**மரியாள்** நிறை கற்பினியாய் **நாசரேத்** என்னும் ஊரில் இருந்தாள், ஆயினும் **இயேசு பிறந்தது பெத்லகேமில்.** இதற்கு இரு காரியங்களை ஆண்டவர் ஒழுங்குபடுத்தினார்.

1) யோசேப்போடுள்ள **திருமண ஒப்பந்தம்**

2 ) **குடிமதிப்பெழுதும்படியான** அகஸ்துராயனுடைய கட்டளை, **யோசேப்பு** தாவீதின் வம்சத்தாலும் குடும்பதானுமாயிருந்தடியினால் தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டு கற்பவதியாய் இருந்த மரியாளுடனே **குடிமதிப்பெழுதும்படி** கலிலேயா நாட்டிலுள்ள **நாசரேத்திலிருந்து** யூதேயா நாட்டிலுள்ள **பெத்லகேம்** என்னும் **தாவீதின் ஊருக்கு** போனான். அவ்விடத்தில் அவர்கள் இருக்கையில் அவளுக்கு பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனை பெற்று சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாமல் போனபடியால் பிள்ளையை துணிகளில் சுற்றி மாட்டு தொழுவத்தில் முன்னணையில் கிடத்தினாள். (லூக் 2:4-7)

மேலும் **வம்ச அட்டவணை** கூறியபோது அவர் **மனுஷனாகிய** கிறிஸ்துவை குறித்து எழுதுவதால் **மரியாளில்** தொடங்கி **ஆதாம்** வரையிலும் உள்ள சரித்திரத்தைக் கூறுகிறார். இப்பகுதியில் **மத்தேயு** கூறும் **வம்ச அட்டவனையும்** லூக்காவில் கூறும் **வம்ச அட்டவனையும்** குழப்பமின்றி படித்து அறிந்துகொள்ளவேண்டும். மத்தேயு கூறும்போது **ஆதாம்** முதல்

**ஆபிரகாம்** வரையிலும் உள்ள விவரங்களை கூறாமல் விட்டுவிட்டு **ஆபிரகாம் முதல் தாவீது வரை** உள்ள விவரங்களை மட்டும் கூறி **தாவீதின்** இரு குமாரரில் ஒருவரான **சாலமோன்** வழியாக மரியாளுடைய புருஷனாகிய **யோசேப்பு** வரையிலும் கூறி அவளிடத்தில் இயேசு பிறந்தார் என குறிப்பிட்டு அங்கு சரித்திரத்தை நிறுத்திக்கொள்கிறார். இயேசுவை **ராஜாவாக** அறிவிக்க அது போதுமானது, ஆனால் லூக்கா மரியாளில் தொடங்கியிருக்கிறார். ஆனால் **மரியாளின் பெயரை** கூறாமல் அவளுடைய **புருஷன் பெயரையே** கூறியிருக்கிறார். சிலர் வம்ச அட்டவனையை கூறும்போது **பெண்கள் பெயர்** குறிப்பிடுவதில்லை. லூக்காவும் **அந்த முறையைத்தான்** கையாண்டு எழுதுகிறார்.

இங்கு **தவீதின்** மற்றொரு மகனான **நாத்தன்** வழியாக **அட்டவனையைகூறி** அதை **மரியாள்** வரையிலும் கூறியிருப்பதை கவணிக்கவேண்டும். **மருமகனை** மகன் **என்று கூறும் வழக்கம்** பழைய ஏற்பாட்டில் நாம் காணமுடியும். ஆகையினால்தான் ஏலியின் குமாரன் **யோசேப்பு** என மத் 1:16 கூறுகிறது. தவீது **சவுலின் மருமகனாயிருந்தும்** மகனே **என அழைப்பதையும்** சவுல் **தாவீதின் மருகனாயிருந்தும்** தாவீதும் சவுலை **தகப்பனே** என அழைப்பதையம் 1 சாமு 24:11,16ல் காணலாம். மேற்கூறிய இரு அட்டவணைகளும் தாவீதின் இரு குமாரரிலிருந்து பிரிக்கின்றது என அறிந்தகொண்டால் போதுமானது.

இது தவிர இயேசு பாலகனை **மேய்ப்பர்கள்** வந்து பணிந்தகொண்டது **எட்டாம் நாளில்** தேவலாயத்துக்கு கொண்டு சென்றது. **விருத்தசேதனம்** பண்ணியது. **சிம்யோன், அன்னாள்** ஆகிவர்கள் அவரைக் குறித்து கூறிய காரியங்கள். அவர் பன்னிரெண்டு வயதானபோது **பண்டிகையை ஆசரிக்க எருசலேமுக்கு கொண்டுபோனது.** அவர் **வேத பாரகர் போன்வர்களோடு** பேசிக்கொண்டிருந்தது போன்ற அநேக காரியங்களை **லூக்கா** குறிப்படுகின்றார்.

## யோவான்

நான்காவது புத்தகமாகிய **யோவான்** தேவனாகிய **கிறிஸ்துவைக்** குறித்து கூறுவதாலும் **தேவனுக்கு பிறப்பு** இல்லாதபடியாலும் அவர் **அநாதியாய் இருக்கிறவராகவே இருக்கிறவரானபடியால்** அண்டவருடைய **பிறப்பைக்குறித்து** எதுவும் கூறாமல் வட்டுவிடுகிறார். **ஆண்டவருடைய நாமம்** வார்த்தை என்பதாகும். (வெளி 19:13) அந்த **வார்த்தை** ஆதியில் இருந்தது. (யோ. 1:1) அந்த வார்த்தை **மாம்சமானது** (யோ. 1:4)

எனவே நான்கு சுவிசேஷத்தையும் எழுதியவர்ககள் ஆண்டவருடைய பிறப்பைக் குறித்து எழுதும்போது ஒவ்வொருவரும் இயேசுவை மனதில் நினைத்து **யாராக எழுதுகிறார்களோ** அதற்கு தகுந்தாற்போல் அவருடைய **பிறப்பைக் குறித்தும்** கூறுகின்றனர்.

----::----

# வாசகர் கடிதம்...

2019 மார்ச் மாத ஜாமக்கானில் ஆசிரியர் குறிப்பில் நீங்கள் எழுதியதை வாசித்தபோது உங்கள் **மன பாரத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.** வாசகர்களில் பலர் மற்ற பத்திரிகைகளை வாசிப்பதை போல ஜாமக்காரனையும் வாசித்து ரசிக்க தொடங்கிவிட்டனர். ஜாமக்காரன் ஏதோ பொழுதுபோக்கு பத்திரிகைபோல சிலர் நினைத்துவிட்டார்கள் என்று **உங்கள் மன ஆதங்கத்தை** எழுதினீர்கள்.

ஆனால் எல்லாரும் உங்கள் பத்திரிகையை மேலே நீங்கள் குறிப்பிட்டப்படி வாசிப்பதில்லை. குறிப்பாக **நீண்ட காலமாக** ஜாமக்காரனை வாசிக்கும் **எங்களைப்போல** எவ்வளவோ வாசகர்கள் ஜாமக்காரனை **ஆசைப்பட்டு** உங்கள் உங்கள் ஆலோசனையை **கருத்தோடு** வாசித்து **ஜெபிப்பவர்கள்** உண்டு. எங்களுக்கு **எச்சரிப்பு வேண்டும்.** கர்த்தருக்குமுன் **குற்றமற்றவர்களாக** நிற்க உங்கள் பத்திரிகையில் நீங்கள் **கடிந்துகொண்டு போதிப்பதையே** நாங்கள் விரும்புகிறோம்.

எனக்கு தெரிந்து எத்தனையே **பெந்தேகோஸ்தே** சகோதரர்கள் தாங்கள் பேசும் **அன்னிய பாஷை** உளரளை **நிறுத்திவிட்டார்கள்.** அதே சமயம் அவர்கள் சபையை விட்டு அவர்கள் விலகவில்லை. **அதுவும் உங்கள் பத்திரிகையின் ஆலோசனைதான்**

உங்கள் பத்திரிகையில் ஆவியானவர் மூலம் உணர்த்தப்பட்டு எழுதும் **எந்த எச்சரிப்பும்** ஆலோசனையும் **எத்தனை எதிர்ப்புகள்** வந்தாலும் தயவுசெய்து நீங்கள் ஜாமக்காரனில் அவைகளை **எழுதுவதை நிறுத்தாதீர்கள்.** எங்களைப்போல் ஆயிரங்கள் – லட்சங்களாக **வாசகர் குடும்பங்கள்** உங்கள்பின் **அணி அணியாய்** ஜெபத்தோடு நிற்கிறோம் என்பதை மனதில் வைத்து **தைரியமாக எழுதுங்கள்.** இது நாங்கள் சிலராய் த**மிழ்நாடு,** வெளிநாடு மற்ற மா**நிலங்களில்** வாழும் **எங்கள் சொந்தங்கள், நண்பர்கள்** மூலம் தொலைபேசி வழியாக கேட்டு எழுதும் செய்தியாகும்.

கர்த்தரின் ஆவியானவர் உங்களோடு இருக்கிறார்.

**ஜாமக்காரன் :** மேலே வாசித்ததை போல ஏராளமானவர்கள் கடிதம் மூலம் **எழுதியும், பேசியும்** என்னை **உற்சாகப்படுத்தியுள்ளனர்.** யாவருக்கும் **என் உள்ளில்** உள்ள **இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்** வாழ்த்துக்களையும், நன்றியையம் அறிவிக்கிறேன்.

கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. ஆமென்.

**எச்சரிக்கை...** TVயில் வரும் **மாதா** TV சேனலை பார்ப்பதை தவிர்த்து, மற்றவர்களுக்கும் அதன் ஆபத்தை அறிவுருத்துங்கள். நல்ல பாடல் நிகழ்ச்சிகள் வருகிறது என்று நீங்கள் கவர்ச்சிக்கப்படலாம். ஆனால் ஆபத்து என்னவென்றால் உலகம் சிருஷ்டித்தது முதல் நம் தெய்வம் வெருக்கும் **விக்கிரக ஆராதனை,** அந்த குறிப்பிட்ட சேனலை நடத்தும் சபையில் பெருகிவிட்டது. பழைய ஏற்பாட்டில் பிதா எச்சரித்த **என்னையன்றி உனக்கு வேறே தெய்வங்கள் வேண்டாம்.** அதை **நமஸ்கரிக்கவும், சேவிக்கவும்** வேண்டாம் என்றார். புதிய ஏற்பாட்டிலும் இயேசு கூறினார். நானே **வழி, சத்தியம், ஜீவன்** நானே **வாசல்** என்றும் குறிப்பிட்டு **இயேசு என்னும்** இந்த **வாசல் வழியாய்** அல்லாமல் ஒருவரும் பரலோகம் போக முடியாது என்று தெளிவாக எச்சரித்திருக்கிறார். ஆனால் இவர்களோ செத்துப்போன **மரியாளை** தெய்வமாக்கி ஜெப மாலையை (ரோசரி) அற்புத விக்கரமாக்கி, செத்துப்போன **அந்தோணியாரையும்** தெய்வமாக்கி எங்களை காப்பாற்றும் என்று ஜெபிக்கிறார்கள். **ஆயர்கள்**-சபை மக்கள் **சம்பாஷனை நிகழ்ச்சியில்** இயேசு தெய்வமாக இருக்க, **மரியாளை** நாம் ஏன் வணங்குகிறோம் என்ற கேள்விக்கு ஆயர்களால் பதில் கூற முடியாமல், நாம் மரியாளுக்கு மரியாதை மட்டுமே செலுத்துகிறோம். மற்றபடி **இயேசுதான் நம் தெய்வம்** என்று கூறி **சமாளித்தார்கள்.** ஆனால் **உண்மை அது அல்ல என்பதை** மாதா தொலைகாட்சியை பார்த்தால் போதும், **மரியாளோடு** எங்களை **காத்தருளும்** எங்கள் மீறுதல்களை **மன்னித்தருளும்** என்று ஜெபிக்கிறார்கள். **செத்துப்போன ஆவிகள்** கிருயை செய்யாது . பிர. 9:5, யோபு 14:1, சங். 30:8, 88:10, 115:7, உபா. 18:11 **செத்துப்போன ஆவிகளிடம்** பேசுகிறவன். (ஜெபிக்கிறவன்). **சபிக்கப்பட்டவனாயிருக்கிறான்.** மேலும் TVபார்பவர்களின் குடும்பத்தில் **செத்துப்போனவர்கள்** பெயரில் 500/- அனுப்பினால் அவர்கள் **எத்தனை பாவம்** செய்திருந்தாலும் **பாதிரியார் ஜெபித்தவுடன்** செத்துபோனவர் **பரலோகம் போய்விடுவார்கள்** என்று விளம்பரப்படுத்துகிறார்கள். இது **பயங்கர ஏமாற்றுதனமாகும்.** ஆகவேதான் **மாதா** TV சேனலை **நீங்களும், மற்றவர்களும் பார்க்காதிருப்பது** நல்லது. **பிசாசு வஞ்சிக்கிறவன், ஜாக்கிறதை !**

☐ **இயேசுவாலன்றி** வேறொருவராலும் இரட்சிப்பு (மீட்பு) இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழ் எங்கும் மனுஷர்களுக்குள்ளே **இயேசு** என்னும் நாமமேயல்லாமல் **வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை.** அப். 4:12

**NOVEMBER-2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.